# காலநிலை மாற்றத்தின் போது ஓதவேண்டிய துஆக்கள்

காற்று அல்லாஹ்வின் புரத்தில் நின்றும் உள்ளது, அது அல்லாஹ்வின் ரஹ்மத்தை அல்லது வேதனையை கொண்டுவருகிறது, எனவே நீங்கள் அதனை கண்டால் அதற்கு திட்ட வேண்டாம், அதனுடைய நலவை அல்லாஹ்விடம் வேண்டுங்கள். மேலும் அதனுடைய தீங்கை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடுங்கள் என்று நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள். ( நூல்: அபூதாவுத்)

**காற்று வேகமாக வீசும் போது,** (நூல்: முஸ்லிம்)

اَللَّهُمَّ إِنِّي أَسأَلُكَ خَيْرَهَا وَخَيْرَ مَا فِيْهَا وَخَيْرَ مَا أُرْسِلَتْ بِهِ، وَأَعُوْذُ بِكَ مِنْ شَرِّهَا وَشَرِّ مَافِيْهَا وَشَرِّ مَا أُرْسِلَتْ بِهِ.

**கருத்து:** யா அல்லாஹ்! நிச்சயமாக நான் இதன் (இந்தக் காற்றின்) நன்மையையும் இதிலுள்ள நன்மையையும் இது எந்தவொன்றுடன் அனுப்பப்பட்டதோ அதன் நன்மையையும் உன்னிடம் கேட்கின்றேன். இன்னும் இதன் (இந்தக் காற்றின்) கெடுதியைவிட்டும் இதிலுள்ள கெடுதியைவிட்டும் இது எந்தவொன்றுடன் அனுப்பப்பட்டதோ அதன் கெடுதியைவிட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன்.

**வானத்தில் கருமேகங்களைக் கண்டால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எல்லா அமல்கலையும் விட்டுவிட்டு கீழ் கானும் துஆவை ஓதுவார்கள்,** (நூல்: அபூதாவுத், நஸஈ, இப்னுமாஜா)<

اَللَّهُمَّ إِنِّي أَعُوْذُ بِكَ مِنْ شَرِّهَا.

**கருத்து:** யா அல்லாஹ்! நான் (கருமேகங்கள்) இவற்றின் கெடுதியைவிட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன்.

**இடி மின்னலின் போது** (1:நூல் முஸ்லிம், 2: நூல் முஅத்தா)

اَللَّهُمَّ لاَ تَقْتُلْنَا بِغَضَبِكَ، وَلاَ تُهْلِكْنَا بِعَذَابِكَ، وَعَافِنَا قَبْلَ ذَلِكَ.

سُبْحَانَ الَّذِيْ يُسَبِّحُ الرَّعْدُ بِحَمْدِهِ وَالْمَلاَئِكَةُ مِنْ خِيْفَتِهِ.

**கருத்து-1:** யா அல்லாஹ்! உன் கோபத்தால் எம்மை இல்லாமல் ஆக்கி விடாதே! உன் வேதனையால் எம்மை அழித்துவிடாதே! அவற்றுக்கு முன்னால் எம்மை தேக ஆரோக்கியமுள்வர்களாக ஆக்குவாயாக!

**கருத்து-2:** அல்லாஹ் மிகவும் தூய்மையானவன் அவனை இடி முழக்கம் புகழ்வதோடு துதிக்கின்றது. வானவர்களும் அவனுக்குப்பயந்து ஒடுங்கியவர்களாக துதிக்கின்றனர்.

**மழை பொழியும் போது** (நூல்: புகாரி)

اَللَّهُمَّ صَيِّبًا نَافِعًا.

**கருத்து:** யா அல்லாஹ்! பயன்தரும் மழையை பொழியச்செய்வாயாக.

**மழை அதிகமாக பொழியும் போது** (நூல்: புகாரி)

اَللَّهُمَّ حَوَالَيْنَا وَلاَ عَلَيْنَا، اَللَّهُمَّ عَلَى الآكَامِ وَالظِّرَابِ وَبُطُوْنِ الأَوْدِيَةِ وَمَنَابِتِ الشَّجَرِ.

**கருத்து:** யா அல்லாஹ்! இம்மழையை எங்கள் மீதல்லாமல் எங்கள் சுற்றுப்புறங்களிலும், குன்றுகளின் மீதும், மலைகளின் மீதும், ஓடைகளின் உட்புறங்களிலும், தாவரங்கள் முளைக்கும் இடங்களிலும் பொழிந்திடச் செய்வாயாக.

**அனர்த்தங்களை விட்டும் பாதுகாப்பு பெற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நமக்கு கற்றுத்தந்த துஆ**

اَللَّهُمَّ إِنِّي أَعُوْذُ بِكَ مِنَ الْهَدْمِ، وَأَعُوْذُ بِكَ مِنَ التَّرَدِّي، وَأَعُوْذُ بِكَ مِنَ الْغَرَقِ، وَالْحَرَقِ، وَالْهَرَمِ، وَأَعُوْذُ بِكَ أَنْ يَتَخَبَّطَنِي الشَّيْطَانُ عِنْدَ الْمَوْتِ، وَأَعُوْذُ بِكَ مِنْ أَنْ أَمُوْتَ فِي سَبِيْلِكَ مُدْبِرًا، وَأَعُوْذُ بِكَ مِنَ أَنْ أَمُوْتَ لَدِيْغًا. (أبوداود، النسائي)

**பொருள்:**

யா அல்லாஹ்! (கட்டிடங்கள் போன்றவற்றின்) இடிபாடுகளிலிருந்தும், (பள்ளத்தாக்குகள் போன்றவைகளிலிருந்து) சருகி விழுவதிலிருந்தும், நீரில் மூழ்கடிக்கப்படுவதிலிருந்தும், நெருப்பால் எரிக்கப்படுவதிலிருந்தும், (தள்ளாடும்) வயோதிபத்திலிருந்தும், மரணவேளையில் ஷைத்தானின் கெடுதியிலிருந்தும், உன்பாதையிலிருந்து புறமுதுகுகாட்டிய நிலைமையில் மரணிப்பதிலிருந்தும் விஷஜந்துக்களால் தீண்டப்பட்ட நிலைமையில் மரணிப்பதிலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாவல் தேடுகிறேன்.

தொகுப்பு: Moulavi: Adhnan Mubarak Hashimi Mobil: 0714860866 / 0773037776 E:mail: masnoondua241@gmail.com

Distributed via SLHub.com